## பள்ளிக் கல்வித் துறை

**<u>கடித எண் 16801/என்/2006 நாள் 22.06.2006</u>**

அனுப்புநர்
திரு.ம. குற்றாலிங்கம், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6.
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை-6.

ஐயா,

பொருள் பள்ளிக் கல்வி - காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாள் என அறிவித்து அந்நாளில் பள்ளிகளில் விழா

எடுத்தல் - அந்நாளை பள்ளி வேலை நாளாக அறிவித்தல் ஸ்ரீ சார்பு.

பார்வை அரசாணை (நிலை) எண் 72, பள்ளிக் கல்வி (என்) துறை நாள் 24.5.2006.

---

பார்வையில் கண்டுள்ள அரசாணையில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஜூலை திங்கள் 15 ஆம் நாளை "கல்வி வளர்ச்சி நாள்" என அரசு அறிவித்து ஆணையிட்டுள்ளது. அந்நாளில் பள்ளிகளில் மாணவர்கள் புத்தாடை அணிந்து விழா எடுத்து காமராஜர் திருவுருவப்படத்தை அலங்கரித்து மகிழ்ச்சியுடன் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் எனவும், இவ்விழா அப்பள்ளி ஆசிரியர்கள் மேற்பார்வையில் நடப்பது சிறப்பாக இருக்கும் எனவும் அவ்வரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. அரசு அறிவித்துள்ள இத்திட்டம் வரும் ஜூலை 15 ஆம் நாள் சனிக்கிழமையில் வருவதாலும், சனிக்கிழமை தமிழகம் முழவதும் பள்ளிகளுக்கு விடுமுறை நாளாக இருப்பதால், சனிக்கிழமையன்று இவ்விழா கொண்டாடுவதற்கு வசதியாக, அந்நாளை பள்ளி வேலை நாளாக அறிவிக்கப்படுகிறது. அந்நாளிற்கு பதிலாக பிறிதொரு நாளை, பள்ளிகளுக்கு விடுமுறை நாளாக அறிவிக்கலாம் என்றும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசுச் செயலாளருக்காக.

**நகல்**

செயலாளர், நிதித் துறை, சென்னை 9
செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சென்னை- 9
செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை- 9
செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை- 9
செயலாளர், செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை- 9
இயக்குநர், செய்தி மற்றும் தகவல் துறை, சென்னை- 9
இயக்குநர், கல்லூரிக் கல்வித் துறை, சென்னை- 6
இயக்குநர், பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் நலத் துறை, சென்னை -5
இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை -5
இயக்குநர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை -5
செயலாளர், முதலமைச்சரின் அலுவலகம், சென்னை -9
பள்ளிக் கல்வி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை -9